| Page No.3 | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| **நாள்** | 08.11.2023 |
| MCOP | 151/2020 |
| மசா.2 | நாட்ராயன் |

2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 08-ம் நாள் மனுதாரர் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.ஸ்ரீவித்யா.,B.Com.,M.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - நாட்ராயன் | ஜாதி | - |
| தந்தை பெயர்; | - | சமயம் | - |
| கிராமம் | - | தொழில் | - |
| தாலூக்கா | - | வயது | - |

முதல் விசாரணை -

நான் மனுதாரர் எனது தரப்பு முதல்நிலை விசாரணைக்காக வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன், பிரமாண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன், அதில் கூறியுள்ள விவரங்கள் சரியானவை, பிரமாண வாக்குமூலத்தை முதல்நிலை விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தில் அடிபட்ட பெத்தண்ணசாமியை எனக்கு எப்படி தெரியும் என்ற கேட்டால் விபத்திற்கு ஆறு மாத காலம் முன்பாக வேலை செய்யும் அடிப்படையில் எனக்கு தெரியும். நாங்கள் இருவரும் ஒன்றாக தான் கட்டிட வேலை செய்து கொண்டிருந்தோம். தற்பொழுது மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக தான் இந்த வழக்கில் சாட்சியமளிக்க வந்துள்ளேனா என்றால் ஆம். விபத்தை நான் பார்த்ததால் என்னை சாட்சி சொல்ல கூப்பிட்டார்கள். இந்த விபத்து தொடர்பாக

போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் கம்பம் போலிசார் விசாரித்தார்கள். அந்த வாக்குமூல விபரங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து பற்றி எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது என்று சொன்னாலும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னாலும் அதனால் தான் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னாலும் தவறு. விபத்து நடந்த இடம் எங்கு உள்ளது என்று கேட்டால் கம்பம் மெட்டிலிருந்து கம்பத்திற்குள் வரும் ரோட்டில் செக்போஸ்ட் அருகில் மாதா கோயில் பக்கத்தில் விபத்து நடந்தது. விபத்து நடந்த இடம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த ரோடா என்று கேட்டால் இல்லை. ஓரளவிற்கு ஜனங்கள் சென்று வரும் ரோடு தான். பெத்தண்சமி யாருடன் எந்த வண்டியில் சென்றார் என்று கேட்டால் குமார் என்பவருடன் டிஎன்60 ஆர்1631 என்ற இருசக்கர வாகனத்தில் சென்றார். எனக்கு முன்பாக சுமார் 50 அடி தூரத்தில் குமார் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் சென்றது. அந்த ரோடு நேரான ரோடா என்று கேட்டால் ஆம். குமாருக்கு முன்பாக எந்த வாகனமும் போகவில்லையா என்று கேட்டால் இல்லை. அந்த ரோட்டில் வேகத்தடையோ, அல்லது குண்டும் குழியுமாகவோ இருந்ததா என்று கேட்டால் இல்லை. சாலை நல்லமுறையில் தான் இருந்தது. எப்படி இந்த விபத்து நடந்தது என்று கேட்டால் குமார் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றபோது பிரேக் போட்ட சமயத்தில் பின்னால் உட்கார்ந்து சென்ற பெத்தண்ணசாமி வண்டியிலிருந்து முன்னால் விழுந்து விட்டார். அவர் மீது வண்டி ஏதாவது ஏறிவிட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது போன்று அமைப்புடன் உள்ள சாலையான குண்டும் குழியுமற்ற நேரான ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது திடீரென பிரேக்போடும் அவசியமில்லை என்று சொன்னாலும், அப்படியே பிரேக் போட்டிருந்தாலும் மனுதாரருக்கு இந்த அளவிற்கு அடிபடவேண்டிய அவசியமில்லை என்று சொன்னாலும் சரியல்ல. வேகமான சென்று இருசக்கர வாகனம் கண்ட்ரோல் இல்லாமல் செல்லும்போது தான் மனுதாரர் கீழே விழுந்து விட்டார். வாகனத்தை ஓட்டிச்சென்றவர் கீழே விழுந்தாரா என்று கேட்டால்

இல்லை. வண்டியும் விழுந்ததா என்றால் இல்லை. வண்டியில் பின்னால் அமர்ந்து சென்ற



பெத்தண்ணசாமி அவரின் கவனக்குறைவால் தான் கீழே விழுந்து விபத்தை வரவழைத்துக்கொண்டார் என்றாலும் ஓட்டுநரின் கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் இந்த விபத்து ஏற்படவில்லை என்று சொன்னாலும், மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்த வழக்கில் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு.